DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

Spl.C.C.No. 01/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.15

Accused A1 absent. A2 present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ரகுபதி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 09th day of October, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது கடலூர் மாவட்ட குற்றப்பிரிவு 28.09.2025 முதல் காவல் துணைக்கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 2017 டிசம்பர் மாதம் முதல் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளராக பணியாற்றினேன்.

கடந்த 01.07.2018 முதல் விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் துணைக்கண்காணிப்பாளராக முழு கூடுதல் பொறுப்பாக பணியாற்றினேன். விருதுநகர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல் நிலைய குற்ற எண் 06/2018 என்ற வழக்கினை மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.பாண்டியராஜன் என்பவரிடமிருந்து பெற்று மேற்படி வழக்கில் புலன்விசாரணையை செய்தேன்.

இந்த வழக்கில் 1 முதல் 13 சாட்சிகளை முன்னால் காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.சீனிவாச பெருமாள் அவர்கள் விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்து சான்று பொருட்களை கைப்பற்றி புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார். அதன்பின்னர் திரு.பாண்டியராஜன் புலன்விசாரணை செய்திருக்கின்றார். நான் புலன்விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்தபோது முந்தைய புலன்விசாரணை அதிகாரியிடம் சொன்னதுபோன்றே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேலும் திரு.சீனிவாச பெருமாள், பாண்டியராஜன் அவர்களை 13.07.2018 ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அதன்பின்னர் பணிமாறுதலில் சென்றுவிட்ட படியால் காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு. சத்திய சீலன் அவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டு பணிமாறுதலில் சென்றுவிட்டேன்.

**1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

நான் சொன்னது போன்று நான் ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் விசாரித்த சாட்சிகளுக்கு சம்மன் அனுப்பி விசாரித்தேனா இல்லை வாய்மொழியாக விசாரித்தேனா என்றால் வாய்மொழியாகத்தான் விசாரித்தேன். இந்த வழக்கின் புலன்விசாரணை என் பொறுப்பில் இருந்தபோது சம்பவ இடமான அருப்புக்கோட்டை நகராட்சியில் சிசிடிவி அமைப்புகள் பொருத்தப்பட்டு இருந்தனவா என்று குறித்து நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அருப்புக்கோட்டை நகராட்சியில் மார்ச் 26 முதல் ஏப்ரல் 02 வரையிலான காலகட்டத்தில் கருவூலம் மூலம் வரவு செலவு கணக்குகள் இயக்கப்படுவது நகராட்சி நிர்வாக இயக்குனரால் முடக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அதன் காரணமாக 1ம் எதிரியானவர் அசா 2 யிடம் ஒப்பந்த பிடித்தக்தொகையை திரும்ப வழங்குவது சம்பந்தமாக அவரிடம் லஞ்சப்பணம் கேட்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.